
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 210 | உள்ளூர் - 29.07.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 210 | வெளியூர் - 30.07.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

எந்த ராசிக்கு எந்த வயதில் சொந்த வீடு யோகம்?
புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!
தபால் கட்டணம் ஆக.1 முதல் உயர்வு!
பழநி நில மோசடி: 4 பேர் கைது!

## டிரம்ப்-நெதன்யாகு ரகசிய ஆலோசனை... உலக நாடுகள் உச்சகட்ட கவலை!

வாஷிங்டன், ஜூலை. 29–

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெள்ளை மாளிகையில் அவசர ஆலோசனை நடத்தினர். ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தியப்பின் இருதலைவர்களும் நேரில் சந்திப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது....இந்த சந்திப்பில் ஈரான் அணு திட்டம், காசா போர், ஹமாஸ் கைதிகள் விடுவிப்பு மற்றும் மத்திய கிழக்கின் பாதுகாப்பு நிலவரம் குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. அண்மையில் அமெரிக்காஇஸ்ரேல் இணைந்து ஈரானின் அணு தளங்களை தாக்கிய நிலையில், இந்த சந்திப்பு சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கி ன்றனர். உலக நாடுகள் இந்த பேச்சுவார்த்தையின் முடிவை உன்னிப்பாக கவனித்து வருகின்றன.



## அறநிலையத்துறை 2 மண்டலங்களாக பிரிப்பு...!

சென்னை, ஜூலை. 29–

கோயில்களின் நிர்வாகத்தை மேலும் திறம்பட மேற்கொள்ளும் நோக்கில், தமிழக அறநிலையத்துறை வடக்கு (சென்னை) மற்றும் தெற்கு (திருச்சி) என இரு புதிய மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரு மண்டலங்களையும் கண்காணிக்க மூத்த ஐஏஎஸ் அந்தஸ்தில் கூடுதல் ஆணையர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வடக்கு மண்டலத்தில் சென்னை, காஞ்சிபுரம், வேலூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களும், தெற்கு மண்டலத்தில் திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களும் இடம்பெற்றுள்ளன. புதிய கூடுதல் ஆணையர்கள் கோயில் சொத்துகள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்தல், கோயில் நில வருவாயை கண்காணித்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தணிக்கை கட்டணங்களை வசூலித்தல், நலத்திட்டப் பணிகளை ஆய்வு செய்தல் உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளை மேற்கொள்வார்கள்.

பழனி, கரூர் உள்ளிட்ட பகுதிகளில் கோயில் நிலம் தொடர்பான சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், இந்த நிர்வாக மறுசீரமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.





தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், மனித வள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 48 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் த. சரத்குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் வே.க. ராஜீவ், தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சி. சமயமூர்த்தி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் அனுராக் மிஷ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் ‘ஜீரோ எஃப்ஐஆர்’ நடைமுறை அமல்!

சென்னை, ஜூலை. 29–

தமிழகத்தில் புதிய குற்றவியல் சட்டத்தின் கீழ் ‘ஜீரோ எஃப்ஐஆர்’ நடைமுறை ஜூலை 2026 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், குற்றச்சம்பவம் எந்த காவல் நிலைய எல்லைக்குள் நடந்திருந்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் அருகிலுள்ள எந்த காவல் நிலையத்திலும் அல்லது மின்னணு வழியிலும் புகார் அளித்து எஃப்ஐஆர் பதிவு செய்யலாம். இதற்கு முன்பு அதிகார எல்லை காரணமாக புகார் ஏற்க மறுக்கப்பட்டதால், பாதிக்கப்பட்டவர்கள் பல காவல் நிலையங்களுக்கு அலைந்தும், விசாரணையில் தாமதமும் ஏற்பட்டது.

புதிய நடைமுறையால் புகாரை உடனடியாக பதிவு செய்து, பின்னர் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு மாற்றி விசாரணை மேற்கொள்ளப்படும். இணையவழி நிதி மோசடி தொடர்பான புகார்கள் தேசிய சைபர் கிரைம் போர்ட்டல்அல்லது 1930 உதவி எண் மூலம் அளிக்கப்படும் போது, அவை இ–ஜீரோ எஃப்ஐஆர் ஆக பதிவு செய்யப்படும். அதன் பின்னர், புகார்தாரர் 3 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி அதை வழக்கமான எஃப்ஐஆராக மாற்ற வேண்டும்.

தமிழகத்தில் இந்த நடைமுறை அமலுக்கு வந்த பிறகு இதுவரை 8 இ–ஜீரோ எஃப்ஐஆர் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான நீதி கிடைக்க உதவும் முக்கிய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.




## கருணை பணி ரத்து: உச்ச நீதிமன்றம் செல்ல தமிழக அரசு முடிவு!

சென்னை, ஜூலை. 29–

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு வழங்கிய கருணை அடிப்படையிலான அரசு பணியை ரத்து செய்த உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

## 5 நாள் அமைதி உடைந்தது..!

# ஈரான் ஏவுகணை அதிரடி..! அமெரிக்கா அதிர்ச்சியில்..!

## மீண்டும் போர் பதற்றம்..!!

டெஹ்ரான்/ வாஷிங்டன், ஜூலை 29–

ஈரான் – அமெரிக்கா இடையேயான மோதல் கடந்த 20 நாட்களாக தீவிரமாக நீடித்து வரும் நிலையில், கடந்த ஐந்து நாட்களாக தாக்குதல்கள் இல்லாமல் இருந்ததால், இரு தரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தை பாதைக்கு திரும்பும் என்ற நம்பிக்கை உருவாகியிருந்தது. அதேசமயம், அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வின் வட்டி விகித முடிவுகளை உலக முதலீட்டு சந்தைகள் எதிர்பார்த்து காத்திருந்தன.

இந்த சூழ்நிலையில், இன்று அதிகாலை மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகளை குறிவைத்து ஈரான் திடீர் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் வெளியாகின. குறிப்பாக ஜோர்டானில் அமைந்துள்ள முவஃபாக் சால்டி (Muwaffaq Salti) விமானப்படைத் தளம் தாக்கப்பட்டதாகவும், ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (IRGC) பல பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியதாக அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த தாக்குதல் வெறும் ராணுவ நடவடிக்கை மட்டுமல்ல, முக்கிய அரசியல் செய்தியையும் வெளிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோர் ஈரான் மீதான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தும் நேரத்திலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஈரான் – ஒமன் இடையேயான பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில், அமெரிக்கா தன்னை பலவீனப்படுத்தி விட்டதாக கருதுவதை மறுக்கும் வகையிலும், தனது ராணுவ திறனை வெளிப்படுத்தும் நோக்கத்திலும் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என ஈரானுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து சர்வதேச கச்சா எண்ணெய் சந்தையில் பரபரப்பு ஏற்பட்டது. பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 5 சதவீதம் உயர்ந்து பேரலுக்கு 88 டாலரை கடந்தது. WTI கச்சா எண்ணெய் விலையும் 83 டாலரை தாண்டியது. இதனால் உலக சந்தைகள் மீண்டும் பதற்றமடைந்துள்ளன.

மேலும் மத்திய கிழக்கில் நிலவும் சூழ்நிலை தொடர்ந்து மோசமடைந்தால், கச்சா எண்ணெய் விலை, தங்கம் உள்ளிட்ட பாதுகாப்பு முதலீடுகளிலும் கூடுதல் ஏற்றம் ஏற்படக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.




## “2009 முதல் வினாத்தாள் கசிவு... நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு பதிலடி!”

புதுடெல்லி, ஜூலை. 29–

பாராளுமன்றத்தில் வினாத்தாள் கசிவு தடுப்பு மசோதா மீதான விவாதத்தில் பேசிய மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், 2009 முதல் பல்வேறு தேர்வுகளில் வினா த்தாள் கசிவு நடந்ததாக பட்டியலிட்டு எதிர்க்கட்சிகளுக்கு பதிலடி கொடுத்தார். 2009 ரயில்வே தேர்வு, 2011 அகில இந்திய பொறியியல் நுழைவுத் தேர்வு, 2012 எய்ம்ஸ் மற்றும் டிஎன்பிஎஸ்சி, 2013 மகாராஷ்டிரா இடைநிலைக் கல்வித் தேர்வு உள்ளிட்ட பல தேர்வுகளில் வினாத்தாள் கசிவு நடந்ததாக அவர் குறிப்பிட்டார். இதுபோன்ற முறைகேடுகளை தடுக்கவே மத்திய அரசு தனிச்சட்டத்தை கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். மேலும், தேசிய தேர்வு முகமை (NTA) 2017–ல் மோடி அரசு உருவாக்கியதாகவும், முந்தைய ஆட்சிகளில் வந்த பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை என்றும் கூறினார். முடிக்கப்படாமல் இருந்த பணியை தற்போதைய அரசு நிறைவேற்றியுள்ளதாகவும், அதற்காக பிரதமர் மோடி அரசை பாராட்ட வேண்டும் என்றும் ஜிதேந்திர சிங் வலியுறுத்தினார்.





தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 29.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 13-ம் தேதி

## வரி உயர்ந்தது... தங்க கடத்தல் வெடித்தது!




இந்தியாவில் தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியை மத்திய அரசு 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தியதன் எதிரொலியாக, தங்கக் கடத்தல் சம்பவங்கள் கணிசமாக அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததையடுத்து, அன்னியச் செலாவணியை பாதுகாக்கவும், தங்க இறக்குமதியை கட்டுப்படுத்தவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டான ஏப்ரல் முதல் ஜூன் வரை 247.07 கிலோ தங்கமும், 585.48 கிலோ வெள்ளியும் கடத்தல் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், தங்கம் மற்றும் வெள்ளி கடத்தல் பல மடங்கு அதிகரித்திருப்பது அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களில் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, மே 13–ஆம் தேதி இறக்குமதி வரி உயர்த்தப்பட்ட பிறகு, மே 13 முதல் ஜூன் 30 வரை மட்டும் 161 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சுங்கத்துறையும், வருவாய் புலனாய்வு இயக்குநரகமும் விமான நிலையங்கள் மற்றும் எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளன.

இந்நிலையில், கேரள தங்கம் மற்றும் வெள்ளி வணிகர்கள் சங்கம், அதிக இறக்குமதி வரி காரணமாக சட்டப்பூர்வ நகை வணிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடத்தல் அதிகரித்து அரசின் வரி வருவாயும் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. எனவே தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இறக்குமதி வரி குறைக்கப்பட்டால், தங்கம் மற்றும் வெள்ளி விலையிலும் ஓரளவு சரிவு ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக வணிகர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## முதல்வர் அலுவலகம்? தலைமைச் செயலக சங்கம் கடும் எதிர்ப்பு!




சென்னை. ஜூலை. 29–

சென்னை கோட்டை வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு, முதல்வர் விஜய் அலுவலகத்தை மாற்ற, தமிழ்நாடு தலைமை செயலக சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு தலைமை செயலக சங்க தலைவர் வெங்கடேசன், செயலர் ஹரிசங்கர் ஆகியோர், முதல்வர் விஜய்க்கு அனுப்பியுள்ள கடிதம்:

முதல்வர் விஜய் அறையும், அலுவலகமும் பாரம்பரிய கோட்டை கட்டடத்தில் இருந்து, நாமக்கல் கவிஞர் மாளிகை 10வது தளத்திற்கு மாறவுள்ளது. இதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளன.

உள்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை, தற்போதுள்ள முதல்வர் அலுவலகத்திற்கு மாற உள்ளன.

உள்துறை மற்றும் மது விலக்கு ஆயத்தீர்வை துறையின் பணியாளர்களையும், அத்துறைக்கு உட்பட்ட கோப்புகளையும், பதிவேடுகளையும், முதல்வர் அலுவலகத்திற்கு ஒட்டுமொத்தமாக இடமாற்றம் செய்வதற்கு போதுமான இடவசதி இல்லை. செய்தித்துறை, தலைமை செயலகத்தில் செயல்பட வேண்டும்.

தலைமை செயலக பிரதான கட்டடத்தில் ஏதேனும் பெரும் தீவிபத்து ஏற்பட்டால், உள்துறையின் சில பிரிவுகளில் பணியாற்றும் பணியாளர்கள், அந்த விபத்தில் இருந்து தங்களை தற்காத்துக் கொள்ள எந்தவித வாய்ப்பும் இல்லாத நிலையில் பணியாற்றி வருகின்றனர்.

இடமாற்றத்தால் ஏற்படும் சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்கும், மாற்று வழிகளை மேற்கொள்வதற்கும் சங்க நிர்வாகிகளை அழைத்து, பொதுத் துறை அதிகாரிகள் பேசவில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## எந்த ராசிக்கு எந்த வயதில் சொந்த வீடு யோகம்?





சொந்த வீடு வாங்குவது பெரும்பாலான மக்களின் வாழ்நாள் கனவாகும். ஆனால், அந்தக் கனவு எப்போது நிறைவேறும் என்பது அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. பொருளாதார நிலை, குடும்பச் சூழல், சேமிப்பு, வேலைவாய்ப்பு போன்ற காரணிகளுடன், ஜோதிட ரீதியாகவும் ஒவ்வொரு ராசிக்காரருக்கும் சொந்த வீடு யோகம் வெவ்வேறு வயதில் அமையும் என்று ஜோதிட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜோதிடக் கணிப்பின்படி,

மேஷ ராசிக்காரர்களுக்கு 42 வயதுக்கு மேல் சொந்த வீடு யோகம் வலுவாக அமையும்.

ரிஷப ராசிக்காரர்களுக்கு 32 வயதிலேயே வீடு வாங்கும் வாய்ப்பு கிடைக்கும்.

மிதுன ராசிக்காரர்களுக்கு வேலை மற்றும் இடமாற்றங்கள் காரணமாக 45 வயதுக்கு மேல் வீடு அமையும்.

கடக ராசிக்காரர்களுக்கு பூர்வீக சொத்து அல்லது கடின உழைப்பின் மூலம் 49 வயதுக்கு மேல் சொந்த வீடு கிடைக்கும் என கூறப்படுகிறது.

சிம்ம ராசிக்காரர்களுக்கு குடும்பச் சொத்து அல்லது திருமண உறவுகள் மூலம் வீடு கிடைக்கும் வாய்ப்பு இருந்தாலும், தங்களது சொந்த முயற்சியால் வீடு வாங்கும் யோகம் பெரும்பாலும் 60 வயதுக்கு மேல் அமையும்.

கன்னி ராசிக்காரர்களுக்கு 26 வயது முதல் எந்த வயதிலும் வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது.

துலாம் ராசிக்காரர்களுக்கு 36 முதல் 41 வயதுக்குள் முயற்சி செய்தால் வீடு வாங்கும் யோகம் கைகூடும்.

விருச்சிக ராசிக்காரர்களுக்கு 47 வயதுக்கு மேல் வீடு அமையும் என்று கூறப்படுகிறது.

தனுசு ராசிக்காரர்களுக்கு சிறுவயதிலேயே குடும்பச் சொத்து அல்லது பெற்றோர் மூலம் வீடு கிடைக்கும் வாய்ப்பு அதிகம்.

மகர ராசிக்காரர்களுக்கு 50 வயதுக்கு மேல் வாங்கும் வீடு பல தலைமுறைகளுக்கும் நிலைத்து நிற்கும் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

கும்ப ராசிக்காரர்களுக்கு 37 வயதுக்கு மேல் சொந்த வீடு அமையும்.

மீன ராசிக்காரர்களுக்கு 22 வயதுக்கு மேல் முயற்சி செய்தால் வீடு வாங்கும் யோகம் உருவாகும்.

சில ராசிக்காரர்களுக்கு மனைவி அல்லது குடும்ப உறுப்பினர்களின் பெயரில் வீடு வாங்குவது நல்ல பலனை தரும் என்றும், குறிப்பிட்ட தெய்வங்களை வழிபடுவது, திட்டமிட்ட சேமிப்பு மற்றும் செலவுகளை கட்டுப்படுத்துவது வீடு வாங்கும் வாய்ப்பை அதிகரிக்கும் என்றும் ஜோதிடக் கருத்துகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், இவை அனைத்தும் ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையில் கூறப்படும் கருத்துகளாகும். நடைமுறையில் சொந்த வீடு வாங்குவது ஒருவரின் வருமானம், சேமிப்பு, கடன் பெறும் திறன், குடும்ப ஆதரவு, பொருளாதார சூழல் மற்றும் தனிப்பட்ட முயற்சி ஆகியவற்றையே பெரிதும் சார்ந்துள்ளது. எனவே ஜோதிட பலன்களுடன், சரியான நிதித் திட்டமிடலும் தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சிகளும் சொந்த வீட்டு கனவை நனவாக்க முக்கிய பங்காற்றுகின்றன.

## தபால் கட்டணம் ஆக.1 முதல் உயர்வு!




சென்னை, ஜூலை. 29–

இந்திய தபால் துறை, விரைவு தபால் சேவைகளுக்கான புதிய கட்டணங்களை அறிவித்துள்ளது. மேலும், முதல் முறையாக 'ஆவணம்' மற்றும் 'பார்சல்' ஆகியவற்றுக்கு தெளிவான வரையறைகளையும் வெளியிட்டு உள்ளது. இந்த புதிய கட்டணங்கள் வருகிற 1–ந் தேதி முதல் அமலுக்கு வருகின்றன. இந்த புதிய விதிகளின்படி, மறுவிற்பனை மதிப்பு இல்லாத கடிதங்கள் மற்றும் அச்சிடப்பட்ட ஆவணங்கள் குறைந்த கட்டணத்தில் அனுப்பப்படலாம். வணிகப்பொருட்கள் மற்றும் மறுவிற்பனை செய்யக்கூடிய பொருட்கள் அனைத்தும் பார்சல் பிரிவில் சேர்க்கப்படும்.

வங்கி பாஸ்புத்தகம், காசோலை புத்தகம், வங்கி கணக்கு அறிக்கை. பான் கார்டு, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுகள் உள்ளிட்ட ஆவணங்கள் "ஆவணம்" பிரிவில் இடம்பெறும். அதேபோல், 500 கிராம் வரை எடையுள்ள ராக்கி உறைகள், வாழ்த்து அட்டைகள் மற்றும் வணிக மதிப்பு இல்லாத அச்சிடப்பட்ட பொருட்களும் இந்த பிரிவில் சேர்க்கப்படும். இதற்கு அப்பாற்பட்ட அனைத்து பொருட்களும் பார்சல் பிரிவில் வகைப்படுத்தப்படும்.

பொதுமக்கள் மற்றும் மொத்த வாடிக்கையாளர்களுக்காக '24 விரைவு தபால்' மூலம் அனுப்பப்படும் பொருட்கள் 24 மணி நேரத்துக்குள் வழங்கப்படும். '48 விரைவு தபால்' மூலம் அனுப்பப்படும் பொருட்கள் 48 மணி நேரத்துக்குள் வழங்கப்படும்.

இந்த சேவைகள் தற்போது டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் ஐதராபாத் ஆகிய 6 நகரங்களில் மட்டுமே கிடைக்கின்றன.24 மணி நேர விரைவு தபால் சேவையில், பொதுமக்களுக்கான கட்டணம் பொருளின் எடை மற்றும் தூரத்தை பொறுத்து ரூ.38 முதல் ரூ.186 வரை நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. 50 கிராமுக்கும் குறைவான பொருளை உள்ளூர் முகவரிக்கு அனுப்ப ரூ.38, இந்தியாவின் பிற பகுதிகளுக்கு அனுப்ப ரூ.94 வசூலிக்கப்படும். 48 மணி நேர விரைவு தபால் சேவைக்கான கட்டணம் பொதுமக்களுக்கு ரூ.61 முதல் ரூ.121 வரை இருக்கும்.

மொத்த வாடிக்கையாளர்களுக்கு 24 மணி நேர சேவைக்கான கட்டணம் ரூ.38 முதல் ரூ.100 வரையும், 48 மணி நேர சேவைக்கான கட்டணம் ரூ.48 முதல் ரூ.72 வரையும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இந்த புதிய நடைமுறையால் ஆவணங்கள் மற்றும் பார்சல்களை தனித்தனியாக வகைப்படுத்தி, அதற்கேற்ற கட்டணத்தில் அனுப்பும் வசதி கிடைக்கும் என்று தபால் துறை தெரிவித்துள்ளது.

## அமெரிக்கா கனவுக்கு பிரேக்?




அமெரிக்கா, ஜூலை. 29–

அமெரிக்காவில் புதிய H–1B விசாக்களை 3 ஆண்டுகள் நிறுத்த பரிந்துரைக்கும் சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குடியரசுக் கட்சி எம்.பி. எலி கிரேன் அறிமுகப்படுத்திய இந்த மசோதாவில், ஆண்டு விசா உச்சவரம்பை 65,000–லிருந்து 25,000 ஆக குறைப்பது, குறைந்தபட்ச ஆண்டு ஊதியத்தை 2 லட்சம் அமெரிக்க டாலராக நிர்ணயிப்பது உள்ளிட்ட கடுமையான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், குடும்பத்தினரை அழைத்துச் செல்வது மற்றும் கிரீன் கார்டுக்கு விண்ணப்பிப்பதிலும் கட்டுப்பாடுகள் விதிக்க பரிந்துரைக்க ப்பட்டுள்ளது. தற்போது ஆரம்ப கட்டத்தில் உள்ள இந்த மசோதா, நாடாளுமன்ற ஒப்புதல் மற்றும் அதிபரின் கையெழுத்து பெற்றால் மட்டுமே சட்டமாகும். இது அமலுக்கு வந்தால், அமெரிக்கா செல்லத் திட்டமிடும் இந்திய ஐடி ஊழியர்கள், மருத்துவர்கள் மற்றும் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்படலாம்.

## மு.க.அழகிரி மகள் கைது; ஜாமீனில் விடுதலை!

சென்னை, ஜூலை. 29–

சென்னை அடையாறில் வங்கி மேலாளரை தாக்கியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், முன்னாள் மத்திய அமைச்சர்



மு.க.அழகிரியின் மகள் கயல்விழி அழகிரி போலீஸாரால் கைது செய்யப்பட்டு, பின்னர் நிலைய ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். சம்மன் அடிப்படையில் ஆஜரான அவரிடம் போலீஸார் விசாரணை நடத்தினர். லிப்ட் பராமரிப்பு தொடர்பான வாக்குவாதத்தின் போது வங்கி மேலாளரை தாக்கியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



பழனியில், சட்டமன்ற அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் ரவிமனோகரன் அவர்களை, பழனியில் புதிதாக பொறுப்பேற்ற நகராட்சி ஆணையர் ராஜலட்சுமி அவர்கள், மரியாதை நிமித்தமாக சந்தித்து பொன்னாடை வழங்கினார். மேலும் பழனியில் வளர்ச்சி பற்றி பேச்சுவார்த்தை நடைபெற்றது.



இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியம், கருத்தனேந்தல் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வாரம் ஒருமுறை சிக்கன் பிரியாணி?



சென்னை, ஜூலை. 29–

தமிழக அரசுப் பள்ளிகளின் மதிய உணவுத் திட்டத்தில், வாரம் ஒருமுறை சிக்கன் பிரியாணி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் இருப்பதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜமோகன் தெரிவித்துள்ளார். ஆசிரியர் மற்றும் பணியாளர் சங்கங்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், அதை அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருவதாகவும் அவர் கூறினார். முதல்வரின் ஒப்புதல் கிடைத்தால், மாணவர்களுக்கு வாரந்தோறும் சிக்கன் பிரியாணி வழங்கும் திட்டம் அமலுக்கு வர வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் மாணவர்களின் ஊட்டச்சத்து மற்றும் பள்ளி வருகையை மேலும் அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## தலைமை செயலக ஊழியர்கள் உணவருந்த இடமின்றி தவிப்பு!



சென்னை, ஜூலை. 29–

தலைமைச் செயலக ஊழியர்களுக்கு, உணவருந்த தனி அறை எதுவும் இல்லை. இதனால், திறந்த வெளியில், மரத்தடியில் அமர்ந்து சாப்பிடுகின்றனர். சிலர், அலுவலகம் வெளியே, வராண்டாவில் தரையில் அமர்ந்து சாப்பிடுகின்றனர். மழைக் காலங்களில், மரத்தடியில் உணவு அருந்துவோர், வராண்டாவில் சாப்பிட வரும்போது, இட நெருக்கடி ஏற்படுகிறது.

தற்போது, நாமக்கல் கவிஞர் மாளிகையில், ஏழு மற்றும் எட்டாவது தளங்களில் உள்ள உணவு அருந்தும் அறைகள், அலுவலர்களுக்குரிய அறையாக மாற்றப்பட உள்ளதால், அங்கு சாப்பிடுவோருக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## 151 உயர்சிறப்பு மருத்துவ இடங்கள் வீண்!

சென்னை, ஜூலை. 29–

151 உயர்சிறப்பு மருத்துவ படிப்பு இடங்களை கைவிட்ட தவெக அரசுக்கு மருத்துவர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. தமிழக அரசுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் அரசின் மூத்த வழக்கறிஞர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு அரசு நியமித்த இரு மூத்த வழக்கறிஞர்களும் நேற்று வழக்கு விசாரணையின்போது ஆஜராகவில்லை என்று தெரிவித்துள்ளது. இன்றைக்குள் 151 உயர்சிறப்பு மருத்துவ இடங்களை சரண்டர் செய்ய நேற்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


## 'திருமதி செல்வம்' புகழ் நடிகர் வி.சி. ஜெயமணி காலமானார்!



சென்னை, ஜூலை 29–

தமிழ் சின்னத்திரையின் மூத்த குணச்சித்திர நடிகர் வி.சி. ஜெயமணி (76) மாரடைப்பால் காலமானார். திருமதி செல்வம், மெட்டி ஒலி, சிறகடிக்க ஆசை உள்ளிட்ட தொடர்களில் நடித்த அவர், குறிப்பாக 'பூங்காவனம்' மற்றும் 'பிரவுன் மணி' கதாபாத்திரங்கள் மூலம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றார். நாடகக் கலைஞராக தனது பயணத்தை தொடங்கிய அவர், பல திரைப்படங்களிலும், 40–க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி தொடர்களிலும் பணியாற்றியதுடன், டப்பிங் கலைஞராகவும், இயக்குநராகவும் செயல்பட்டுள்ளார். அவரது மறைவுக்கு திரையுலகினர் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## மொட்டை அடித்தால் ரூ.15,000 - மோசடி நபர் கைது!



சேலம், ஜூலை. 29–

ஆத்தூர் அருகே மொட்டை அடித்தால் ரூ.15,000 வழங்கப்படும் என பெண்களை ஏமாற்றிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். தலைமுடி வழியாக நோய் பரவுவதாக விளையாட்டாக செல்போனில் சதீஷ்குமார் என்பவர் பேசியுள்ளார். ரூ.15,000–க்கு ஆசைப்பட்டு 3 பெண்கள் மொட்டை அடித்துக் கொண்ட நிலையில் சதீஷ்குமார் (39) கைது செய்யபப்ட்டுள்ளார்.




## வயதுக்கு மீறிய உடல் எடை... \ அதிகரிக்கும் கொலஸ்ட்ரால் அபாயம்!





கொலஸ்ட்ரால் என்பது பெரியவர்களுக்கு மட்டுமே ஏற்படும் பிரச்சனை என்ற எண்ணம் தற்போது மாறி வருகிறது. மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்கள், ஜங்க் ஃபுட், குளிர்பானங்கள், அதிக கொழுப்பு மற்றும் சர்க்கரை நிறைந்த உணவுகள் காரணமாக குழந்தைகளிடமும் கொலஸ்ட்ரால் பாதிப்பு அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். குறிப்பாக, வயதுக்கு மீறிய உடல் எடை கொண்ட குழந்தைகளுக்கு இந்த அபாயம் அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது.

கொலஸ்ட்ரால் ஆரம்ப நிலையில் வெளிப்படையான அறிகுறிகளை ஏற்படுத்தாததால், பெற்றோர் குழந்தைகளின் உடல்நிலையை அவ்வப்போது பரிசோதித்து கவனிக்க வேண்டும். குடும்பத்தில் இதய நோய் அல்லது கொலஸ்ட்ரால் பாதிப்பு வரலாறு இருந்தால், மருத்துவரின் ஆலோசனையின்படி ரத்தப் பரிசோதனை மேற்கொள்வது நல்லது.


குழந்தைகளின் உணவில் எண்ணெயில் பொரித்த உணவுகள், பீட்சா, பர்கர், சிப்ஸ், பேக்கரி பொருட்கள் மற்றும் இனிப்பு பானங்களை குறைத்து, பழங்கள், காய்கறிகள், முழுதானியங்கள், நார்ச்சத்து நிறைந்த உணவுகள் மற்றும் கொள்ளு போன்ற பாரம்பரிய உணவுகளை சேர்க்க வேண்டும். அதேபோல், தினமும் குறைந்தது 60 நிமிடங்கள் ஓடுதல், மிதிவண்டி ஓட்டுதல் அல்லது வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடச் செய்வது உடல் எடையையும், ரத்தக் கொழுப்பையும் கட்டுப்படுத்த உதவும்.

ஆரோக்கியமான உணவுப் பழக்கமும், சுறுசுறுப்பான வாழ்க்கை முறையும் சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே, எதிர்காலத்தில் இதய நோய் மற்றும் கொலஸ்ட்ரால் பாதிப்பிலிருந்து அவர்களை பாதுகாக்கும் சிறந்த வழியாக மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.



## சினிமா துளிகள்..!

## தேவ் ஆனந்தின் மகன் சுனில் ஆனந்த் காலமானார்!



பாலிவுட் நடிகர் தேவ் ஆனந்தின் மகனும் நடிகருமான சுனில் ஆனந்த் (70) லண்டனில் மாரடைப்பால் காலமானார். இந்ததகவலை அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

1984–ஆம் ஆண்டு 'ஆனந்த் அவ்ர் ஆனந்த்' திரைப்படம் மூலம் நடிகராக அறிமுகமான அவர், பின்னர் சில படங்களில் நடித்தார். அதன் பிறகு நடிப்பிலிருந்து விலகி, நவ்கேதன் பிலிம்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்புகளை கவனித்து வந்தார். சுனில் ஆனந்தின் மறைவுக்கு பாலிவுட் திரையுலகினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## முன்பதிவிலேயே மாஸ் காட்டும் 'ஸ்பைடர் மேன்: பிராண்ட் நியூ டே'!




உலக சினிமா ரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் திரைப்படம் ஸ்பைடர் மேன்: பிராண்ட் நியூ டே. இதற்கு முன் கடந்த 2022–ஆம் ஆண்டு வெளியான ஸ்பைடர் மேன்: நோ வே ஹோம் திரைப்படம் உலகளவில் அதிக வசூல் செய்த டாப் 10 திரைப்படங்களில் இடம்பிடித்து சாதனை படைத்தது.

ஒரே சீரியலில் நடித்து காதலித்து திருமணம் செய்து கொண்ட 5 ஜோடிகள்.. யார்யாரெல்லாம் என்று பாருங்க

இதனால் ஸ்பைடர் மேன்: பிராண்ட் நியூ டே திரைப்படம் கண்டிப்பாக டாப் 5ல் இடம்பெறும் என ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதனால் முன்பதிவிலேயே வசூலில் வேட்டையாடி வருகிறது ஸ்பைடர் மேன்: பிராண்ட் நியூ டே. இந்த நிலையில், இந்தியாவில் நடைபெற்று வரும் முன்பதிவில் மட்டுமே இப்படம் ரூ. 30 கோடிக்கும் மேல் இதுவரை வசூல் செய்துள்ளது.கண்டிப்பாக முதல் நாள் இந்திய வசூல் என்பது மாபெரும் சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எ.வ.வேலு மீதான லுக்-அவுட் நோட்டீஸ் ரத்து... சென்னை உயர் நீதிமன்றம்!



சென்னை, ஜூலை. 29–

தமிழக நெடுஞ்சாலைத்துறை முறைகேடு வழக்கில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மீது பிறப்பிக்கப்பட்டிருந்த லுக்–அவுட் நோட்டீஸை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. அதேநேரம், அவர் வெளிநாடு செல்ல வேண்டுமெனில் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் முன்அனுமதி பெற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

வழக்கில் லஞ்ச ஒழிப்புத்துறைக்கு பதில்மனு தாக்கல் செய்ய ஆகஸ்ட் 14 வரை அவகாசம் வழங்கிய நீதிமன்றம், எ.வ.வேலுவுக்கு சம்மன் அனுப்பி விசாரணையை தொடரலாம் என்றும், அதுவரை அவர் மீது எந்தவித கடுமையான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்ற இடைக்கால உத்தரவை நீட்டித்துள்ளது.

மேலும், வழக்கை ரத்து செய்யக் கோரி எ.வ.வேலு தாக்கல் செய்த மனுவுக்கு எதிராக அறப்போர் இயக்கம் தாக்கல் செய்த இடையீட்டு மனுவையும் விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம், அதற்கு பதிலளிக்க எ.வ.வேலு தரப்புக்கு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தது.

# டாஸ்மாக் பார்களுக்கு புதிய விதி: அரசின் அதிரடி அறிவிப்பு!




சென்னை, ஜூலை. 29–

தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளுடன் இணைந்து செயல்படும் பார்களுக்கான விதிகளில் தமிழக அரசு முக்கிய தளர்வுகளை அறிவித்துள்ளது. இதன்படி, இனி டாஸ்மாக் கடை அமைந்துள்ள அதே கட்டிடத்தில் மட்டுமல்லாமல், அந்தக் கடையிலிருந்து 100 மீட்டர் சுற்றளவுக்குள் உள்ள எந்த கட்டிடத்திலும் பார் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளரின் தடையில்லாச் சான்றிதழ் (NOC) மற்றும் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுக்குப் பிறகு பார் செயல்பட முடியும். இந்த புதிய நடைமுறையால் டெண்டரில் அதிக போட்டி உருவாகி, அரசுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும், பார்களில் இடவசதி மற்றும் சேவை தரம் மேம்படும் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், குடியிருப்பு பகுதிகளுக்கு அருகே பார்கள் அதிகரிப்பதால் பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு, போக்குவரத்து நெரிசல் மற்றும் சட்டம்–ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக பாமக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்த புதிய உத்தரவு மாநிலம் முழுவதும் அரசியல் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பழனி காளிகாம்பாள் கோவில் ஆடித்திருவிழா!



பழனி, ஜூலை 29–

பழனி அடிவாரம் கிரிவீதியில் உள்ள ஸ்ரீ காளிகாம்பாள் கோவிலில் ஆடி திருவிழா நடைபெற்றது. இதையொட்டி நேற்று வரட்டாற்றில் இருந்து, தீர்த்தம் கொண்டு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்பு காளிகாம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றது. அதன் பின்பு பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது.

பின்பு பழனி சரவண பொய்கையில் சக்தி கரகம் எடுத்து வரும் நிகழ்ச்சியும், சந்தன கருப்பணசாமி அழைத்துவரும் நிகழ்ச்சியும், முளைப்பாரி எடுத்து வரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பின்பு காளிகாம்பாளுக்கு மாவிளக்கு வைத்து, சந்தன காப்பு அலங்காரத்துடன், வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கான விழா ஏற்பாடுகளை, பழனி டவுன் விஸ்வபிராமண மகாஜன சங்கத்தினர் செய்திருந்தனர்.

## 6 வாரத்தில் தகவல் ஆணையர் நியமனம்; உச்சநீதிமன்றம் உத்தரவு!



சென்னை, ஜூலை. 29–


தமிழகத்தில் காலியாக உள்ள தலைமை தகவல் ஆணையர் உள்ளிட்ட 5 தகவல் ஆணையர் பணியிடங்களை 6 வாரங்களுக்குள் நிரப்ப வேண்டும் என தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

3 மாத அவகாசம் கோரிய தமிழக அரசின் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம், தகவல் ஆணையங்கள் செயல்படாமல் இருப்பது பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையை பாதிக்கும் எனக் குறிப்பிட்டது. மேலும், நியமனங்களை 6 வாரங்களில் முடித்து, அதுகுறித்த நிலை அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் உத்தரவிட்டது.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், குடிநீர் விநியோகம் மற்றும் மின்சார வாரியம் தொடர்பான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.ஜி.லோகநாயகி அவர்கள், ஊரக வளர்ச்சித்துறை, குடிநீர் வழங்கல் துறை மற்றும் மின்சாரத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

## தங்கம் விலையில் தொடர் சரிவு!



சென்னை, ஜூலை. 29–

சென்னையில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.480 குறைந்து ரூ.1,05,240–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 குறைந்து ரூ.13,155–க்கு விற்பனை செய்யப்படுகிறது

வெள்ளி விலை ஒரு கிராம் வெள்ளி ரூ.235–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# போதைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம்!



அனுப்பர்பாளையம், ஜூலை.29

திருப்பூர் மாநகர காவல்துறை மற்றும், பெம் ஸ்கூல் ஆஃப் எக்ஸ்லென்ஸ் பள்ளி ஆகியவை சார்பில், போதைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் இன்று காலை நடந்தது.அங்கேரிபாளையம் ரோடு ஜீவா காலனியில் உள்ள தொழிலாளர் திருமணமண்டபத்தில் தொடங்கிய ஊர்வலத்தை திருப்பூர் மாநகர காவல் துணை ஆணையர் ரமேஷ் கிருஷ்ணா கொடி அசைத்து துவக்கி வைத்தார். இதில், உதவி ஆணையர் பிரதீப்குமார், அனுப்பர்பாளையம் இன்ஸ்பெக்டர் விஜயா, பெம் ஸ்கூல் முதல்வர் விஜய்கார்த்திக், ஆசிரியைகள் மற்றும் மாணவ, மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஊர்வலம் ஜீவா காலனியில் இருந்து பத்மாவதிபுரம் அரசு மேல் நிலைப்பள்ளி ,ஏ.வி.பி முதல் வீதி வழியாக, திருப்பூர் சர்வோதயா சங்கம் வரை நடந்தது. பின்னர் சர்வோதயா சங்கத்தில் இருக்கும் மகாத்மா காந்தியின்அஸ்தி வைத்துள்ள மண்டபத்தின் முன் அஞ்சலி செலுத்தி, போதைக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியை மாணவர்கள் ஏற்றனர்.




மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத்தில் தமிழ்நாடுநாள் விழாவினை கொண்டாடும் வகையில் தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டப் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் வழங்கினார்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## ஓஎன்ஜிசி (ONGC) 52 காலிப்பணியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ஓஎன்ஜிசி)
அறிவிப்பு எண்: 2/2026 (ஆர் & பி)
பணியின் வகை: மத்திய அரசு நிரந்தர வேலை
காலிப்பணியிடங்கள்: 52 (புவியியலாளர் மற்றும் பொறியாளர் இ1 நிலை)
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் நாள்: 17.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.07.2026 (இரவு 11.59 மணி வரை)
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: : https://www.ongcindia.com/

## ஆர்ஆர்ஐ (ராமன் ஆராய்ச்சி நிறுவனம்) 22 காலிப்பணியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: ராமன் ஆராய்ச்சி நிறுவனம் (ஆர்ஆர்ஐ)
அறிவிப்பு எண்: 18/2026, நாள்: 30.06.2026
வேலைவாய்ப்பு வகை: மத்திய அரசு நிரந்தர பணி
மொத்த காலிப்பணியிடங்கள்: 22
பணியிடங்கள்: பொறியாளர் 'சி', பொறியாளர் 'பி', பொறியியல் உதவியாளர் 'சி', தொழிலாளர் 'ஏ'
பணியிடம்: பெங்களூரு
ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கிய நாள்: 30.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.07.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.rri.res.in/

## சிசிஆர்யூஎம் (யுனானி மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில்) 179 காலிப்பணியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: யுனானி மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் (சிசிஆர்யூஎம்)
அறிவிப்பு எண்: 01/2026
வேலைவாய்ப்பு வகை: மத்திய அரசு நிரந்தர பணி
மொத்த காலிப்பணியிடங்கள்: 179
பணியிடங்கள்: குரூப் 'ஏ', குரூப் 'பி' மற்றும் குரூப் 'சி'
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் நாள்: 01.07.2026 (காலை 11.00 மணி)
விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.07.2026 (இரவு 11.59 மணி)
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ccrum.res.in/

## இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட் (எச்பிசிஎல்) 358 பயிற்சி பணியாளர் சேர்க்கை!

நிறுவனத்தின் பெயர்: இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (எச்பிசிஎல்)
வேலைவாய்ப்பு வகை: மத்திய அரசு வேலை
பணியின் தன்மை: பயிற்சி பணியாளர் (அப்ரண்டிஸ்) பயிற்சி
பயிற்சி காலம்: ஓராண்டு
மொத்த காலிப்பணியிடங்கள்: 358 பயிற்சி பணியாளர் பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கிய நாள்: 15.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.07.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.hindustanpetroleum.com/

## இஸ்ரோ இஸ்ட்ராக் 95 பயிற்சி பணியாளர் சேர்க்கை!


நிறுவனத்தின் பெயர்: இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இஸ்ட்ராக் (ISROISTRAC)
அறிவிப்பு எண்: ISTRAC:01:2026
வேலைவாய்ப்பு வகை: மத்திய அரசு வேலை
பணியின் தன்மை: பயிற்சி பணியாளர் (அப்ரண்டிஸ்) பயிற்சி
பயிற்சி காலம்: ஓராண்டு
மொத்த காலிப்பணியிடங்கள்: 95 பயிற்சி பணியாளர் பணியிடங்கள்
பணியிடம்: பெங்களூரு, ஸ்ரீ விஜயபுரம், லக்னோ
ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கிய நாள்: 22.06.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.07.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.isro.gov.in/

## பிஇஎம்எல் லிமிடெட் (BEML) 22 காலிப்பணியிடங்கள்!


நிறுவனத்தின் பெயர்: பிஇஎம்எல் லிமிடெட் (BEML)
அறிவிப்பு எண்: KP/S/12/2026, நாள்: 08.07.2026
வேலைவாய்ப்பு வகை: மத்திய அரசு வேலை
பணியின் தன்மை: ஒப்பந்த அடிப்படையிலான பணி
மொத்த காலிப்பணியிடங்கள்: 22
பணியிடங்கள்: நிர்வாக இயக்குநர், தலைமை பொது மேலாளர், பொது மேலாளர், துணைப் பொது மேலாளர், உதவி பொது மேலாளர், மேலாளர்
பணியிடம்: பெங்களூரு
ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கிய நாள்: 08.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 01.08.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://beml.registrationform.in/




# இன்றைய கார்ட்டூன்




# மக்களவையில் எதிர்க்கட்சிகள் கடும் அமளி!



புதுடெல்லி, ஜூலை. 29–

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் 8–வது நாளான இன்று, பொதுத் தேர்வுகளில் முறைகேடுகளைத் தடுக்கும் (திருத்த) மசோதா, 2026 மீதான விவாதம் மீண்டும் நடைபெறுகிறது. இந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்று உரையாற்ற உள்ளார். கடந்த சில நாட்களாக எதிர்க்கட்சிகளின் அமளியால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் விவாதம் நடைபெறுகிறது. இதற்கிடையே இன்று அவை துவங்கியதும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன.

போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது அடக்குமுறையை கையாண்ட விவகாரம் தொடர்பாகவும் மேகதாது விவகாரமும் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில், அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மாநிலங்களவையிலும் அமளி நீடித்தது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கும் சுகாதாரத்துறை அமைச்சர் ஜேபி நட்டாவிற்கும் இடையே காரசார விவாதம் ஏற்பட்டது. ஜனநாயகத்தை பாதுகாப்பதற்றதாக மத்திய அரசு மாற்றி வருகிறது என்று கார்கே குற்றம் சாட்டினார். இதற்கு பதிலளித்த ஜேபி நட்டா, அவசரநிலைக் காலத்தில் மாணவர் போராட்டத்தின்போது வகுப்பறையிலிருந்தே தான் கைது செய்யப்பட்ட அனுபவத்தை கூறினார்.

# மும்பை பிரபல கிளப்புகளின் உரிமங்கள் ரத்து!



மும்பை, ஜூலை. 29–

மும்பையிலுள்ள மிகவும் பிரபலமான மற்றும் பழமை வாய்ந்த கிளப்புகளில் நடத்தப்பட்ட சோதனையில், உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளில் கடுமையான மீறல்கள் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, 5 முன்னணி கிளப்புகளின் உணவு உரிமங்களை ரத்து செய்து மகாராஷ்டிர உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்துடன், முறையான உரிமம் இன்றி செயல்பட்டு வந்த மற்றொரு பிரபல விளையாட்டு கிளப்பின் உணவு விநியோக சேவையை முற்றிலும் நிறுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**உரிமம் ரத்து செய்யப்பட்ட முக்கிய கிளப்புகள்:**

கடந்த ஜூலை 27 அன்று மும்பை மாநகர் முழுவதும் உள்ள கிளப்புகள், உணவகங்கள் மற்றும் உணவகக் கூடங்களில் எஃப்.டி.ஏ அதிகாரிகள் தீவிர ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர். இதில், தி கிரிக்கெட் கிளப் ஆஃப் இந்தியா, தி வில்லிங்டன் ஸ்போர்ட்ஸ் கிளப், எம்.ஐ.ஜி கிரிக்கெட் கிளப், ஆர்.கே. ஜூஹு ஜிம்கானா, அபர்ணா ஜூஹு ஜிம்கானா ஆகிய 5 புகழ்பெற்ற கிளப்புகளின் உணவு உரிமங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

**பூச்சிகள் மற்றும் ஈக்கள் தொல்லை:**

FDA அதிகாரிகளின் சோதனையின் போது சமையலறை மற்றும் உணவு சேமிப்புப் பகுதிகளில் பல்வேறு தீவிர சுகாதார சீர்கேடுகள் கண்டறியப்பட்டன. உணவுகள் தயாரிக்கப்படும் சமையலறைப் பகுதிகளில் கரப்பான் பூச்சிகள், ஈக்கள் மற்றும் பிற பூச்சிகளின் நடமாட்டம் அதிக அளவில் இருந்தது உறுதி செய்யப்பட்டது.

**சுகாதாரமற்ற பராமரிப்பு:**

உணவுப் பொருட்களை முறையான வெப்பநிலையில் சேமித்து வைக்காதது மற்றும் சமையலறை உபகரணங்கள் தூய்மையாகப் பராமரிக்கப்படாதது கண்டுபிடிக்கப்பட்டது. உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தூய்மை வழிகாட்டுதல்கள் எதையும் இந்த உயர்முனை கிளப்புகள் முறையாகப் பின்பற்றவில்லை.

**பிற கிளப்புகள் மீதான நடவடிக்கை:**

மலாடு மேற்கில் செயல்பட்டு வரும் கோரேகாவ் ஸ்போர்ட்ஸ் கிளப் FSSAI உரிமம் எதுவுமின்றி இயங்கி வந்தது தெரியவந்ததை அடுத்து, அங்கு உணவு சேவைகளை உடனடியாக நிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. ஆய்வுக்குட்படு த்தப்பட்ட 7 நிறுவனங்களில், ஒரு உணவகத்திற்குச் சுகாதார நிலையை மேம்படுத்த அவகாசம் வழங்கி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

**உணவு பாதுகாப்புத் துறையின் எச்சரிக்கை:**

நகரத்தின் உயர்மட்டப் பிரபலங்கள் மற்றும் தொழிலதிபர்கள் உறுப்பினர்களாக இருக்கும் முன்னணி கிளப்புகளிலேயே இத்தகைய சுகாதாரச் சீர்கே டுகள் கண்டறியப்பட்டது பொது மக்கள் மற்றும் உறுப்பினர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உணவுப் பாதுகாப்பு விதிகளில் எவ்வித சமரசமும் செய்யப்பட மாட்டாது என்றும், அனைத்து குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட்டு, மறுஆய்வு செய்யப்பட்ட பின்னரே இந்த கிளப்புகளின் உரிமங்களை மீண்டும் புதுப்பிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் FDA அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

# பாமக தலைவராக அன்புமணி தேர்வு!




செங்கல்பட்டு, ஜூலை. 29–

பாமக தலைவராக அன்புமணி மீண்டும் தேர்வு செய்யப்படுவதாக அக்கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. சட்டசபை தேர்தலுக்கு முன்பாக பாமகவில் ராமதாஸ் – அன்புமணி என்று இரு பிரிவுகளாக பிளவுபட்டது. இருதரப்பினரும் மாறிமாறி நிர்வாகிகளை கட்சியில் இருந்து நீக்கம் செய்து வந்தனர். இது கட்சி நிர்வாகிகளிடையே அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி வந்தது.

இந்த சூழலில், தேர்தலுக்குப் பிறகு ராமதாஸ், அன்புமணி இடையே சமாதானம் ஏற்பட்டது. இதையடுத்து, அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த ராமதாஸ், இனி பாமக தலைவராக அன்புமணி இருப்பார் என்றும் கூறியிருந்தார்.

இந்த நிலையில், செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் உள்ள விடுதியில் பாமக பொதுக்குழு கூட்டம் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், பாமக தலைவராக அன்புமணி மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். பொதுச்செயலாளராக வடிவேல் ராவணன், பொருளாளராக திலகபாமா மீண்டும் தேர்வு செய்யப்பட்டனர்.

# காமன்வெல்த் விளையாட்டு போட்டி; இதுவரை இந்தியா 2 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலம் வென்று சாதனை!




புதுடெல்லி, ஜூலை. 29–

காமன்வெல்த் விளையாட்டு போட்டியில், இதுவரை 2 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களை வென்றுள்ளது.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில், காமன்வெல்த் விளையாட்டு 23வது சீசன் நடக்கிறது. 10,000 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் முதல் வெள்ளி பதக்கத்தை வென்று குல்வீர் சிங் வரலாறு படைத்தார். பெண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு பளுதூக்குதல் போட்டியில் ஹர்ஜிந்தர் கவுர் வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினார்.

இதுவரை இந்தியா இரண்டு தங்கம், ஏழு வெள்ளி, மூன்று வெண்கலம் என 12 பதக்கங்களை வென்றுள்ளது. ஆஸ்திரேலியா தொடர்ந்து முன்னணியில் இருந்தாலும், இந்தியா பதக்கப்பட்டியலில் தற்போது 9 வது இடத்தில் உள்ளது.

# ஜப்பான் நிலநடுக்கத்தில் பலி எண்ணிக்கை 13 ஆக அதிகரிப்பு; மீட்பு பணிகள் தீவிரம்!!



டோக்கியோ, ஜூலை. 29–

ஜப்பானின் கியூஷு தீவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் காணாமல் போனவர்களை மீட்புப் படையினர் தேடிவரும் நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. கிழக்காசிய நாடான ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் உள்ள கியூஷு தீவின் குமாமோட்டோவில் நேற்று பிற்பகல், 7.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. பல கட்டடங்கள், சாலைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகள் சேதமடைந்ததில், 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டன.

பூமிக்கு அடியில் குறைந்த ஆழத்தில் ஏற்பட்ட இந்நிலநடுக்கத்தால், கியூஷுவில் உள்ள பல மாகாணங்களுக்கு அதிகாரிகள் அவசரகால நிலநடுக்க எச்சரிக்கைகளை வெளியிட்டனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 1.50 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். சுனாமி எச்சரிக்கை விடப்பட்டு, இரண்டு மணி நேரத்துக்கு பின் திரும்பப் பெறப்பட்டது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, 40,000 வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு உள்ளதாகவும், சில பகுதிகளில் தொலைத்தொடர்பு சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நிலநடுக்கத்தால் காணாமல் போனவர்களை மீட்புப் படையினர் தேடிவரும் நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது என ஜப்பான் பிரதமர் சனே டகாயிச்சி தெரிவித்தார்.

# அரசு ஊழியர்கள் ஒரு கார் மட்டுமே பயன்படுத்த வேண்டும்!



புதுடெல்லி, ஜூலை. 29–

கடந்த 2022 செப்டம்பரில் வெளியான அறிவிப்பில், தகுதியுள்ள அதிகாரிகள் தங்களின் வழக்கமான மாதாந்திரப் போக்குவரத்திற்கு அளிக்கப்படும் படியை தவிர்த்து, மாதம் ரூ. 3,000 கட்டணம் செலுத்தி, அரசு வாகனங்களைத் தனிப்பட்ட பயணங்களுக்கு (மாதத்திற்கு 500 கி.மீ. வரை) பயன்படுத்தலாம் என்று குறிப்பிட்டிருந்தது.

புதிய விதிமுறைகளின்படி வெளியான அரசாணையில், “ஏற்கனவே அரசுப் பணியாளர் வாகனத்திற்கு உரிமை பெற்ற ஒரு அதிகாரிக்கு, வேறொரு அமைச்சகம், துறை, பொதுத்துறை நிறுவனம் அல்லது தன்னாட்சி அமைப்பின் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்ட காரணத்தால் மட்டும் மற்றொரு அரசு வாகனம் ஒதுக்கப்பட முடியாது.

மாறாக, அந்த அதிகாரி தமக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணியாளர் வாகனத்தையே தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

அலுவல் பணி நிமித்தமாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட சுற்றுப்பயணங்களின்போதோ தவிர, பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் அல்லது அரசு சார்ந்த அமைப்புகளுக்குச் சொந்தமான வாகனங்களை மத்திய அரசு அதிகாரிகள் பயன்படுத்துவதையும் இந்த குறிப்பாணை தடை செய்கிறது.

நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்கும், அரசு வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும், அலுவல் ரீதியான போக்குவரத்தில் தவிர்க்கக்கூடிய செலவினங்களைக் குறைப்பதற்கும், திருத்தப்பட்ட இந்த அறிவுறுத்தல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன” என்று செலவினத் துறை தெரிவித்துள்ளது.

# பழநி நில மோசடி: 4 பேர் கைது!



பழநி, ஜூலை. 29–

திண்டுக்கல் மாவட்டம், பழநி அடிவாரம் பூங்கா ரோட்டில், தண்டபாணி சுவாமி மடத்திற்கு சொந்தமான, 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம், நீதிமன்ற உத்தரவை மீறி போலி ஆவணங்கள் மூலம் தனி நபர்களுக்கு மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

இது குறித்த புகாரில், சி.பி. சி.ஐ.டி., போலீசார், சார் பதிவாளர் ஜஸ்டின் மணி கண்டன், அறக்கட்டளையை சேர்ந்த முருகதாஸ், திருப்பூர் மாவட்டம், உடுமலை பாப்பன்குளம் வெள்ளத்துரை, பழநி சேதுபதி, கோவில் நிர்வாக அதிகாரிகள், வருவாய் துறையினர், பதிவுத்துறையினர் உள்ளிட்ட பல்வேறு நபர்களிடம் விசாரணை நடத்தினர்.

நீதிமன்ற வழக்கு, பத்திரப்பதிவு, விற்பனையாளர், பயனாளி, சாட்சிகள், புரோக்கர், எழுத்தர், பராமரிப்பு, நிர்வாகம் என இதுவரை, 82 பேரிடம் விசாரணை நடத்தி சாட்சியங்களை சேகரித்துள்ளனர். இதுவரை 82 பேரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டுள்ளது என சிபிசிஐடி போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரத்தில் 4 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் இன்று வெள்ளத்துரை, அன்வர்தீன், முருகதாஸ், சேதுபதி ஆகிய 4 பேரை சிபிசிஐடி போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இந்த மோசடி குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தவெகவில் இணையும் ஓபிஎஸ்?



சென்னை, ஜூலை. 29–

த.வெ.க.வில் இணைய ஓ.பன்னீர்செல்வம் முடிவு செய்திருப்பதாக தெரிகிறது.

தமிழக முன்னாள் முதல்–அமை ச்சரும், முன்னாள் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமியுடன் ஏற்பட்ட மோதலால் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டார். அ.தி.மு.க.வை விட்டு வெளியேறிய நிலையில், கே.ஏ.செங்கோட்டையன் வழியில் அவரும் த.வெ.க.வில் சென்று இணைவார் என்று பரபரப்பாக பேசப்பட்டது. அவருடைய மகன் ரவீந்திரநாத்தின் விருப்பமும் அதுவாகத்தான் இருந்தது. ஆனால், சட்டசபை தேர்தலுக்கு முன்பு தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க., ஓ.பன்னீர்செல்வத்தை தங்கள் பக்கம் இழுத்தது. சட்டசபை தேர்தலிலும் யாரும் எதிர்பார்க்காத வகையில், த.வெ.க. ஆட்சி அமைத்ததால், தி.மு.க. எதிர்க்கட்சி வரிசையில் அமர வேண்டியதாகிவிட்டது.


தி.மு.க.வில் கடந்த பிப்ரவரி மாதமே ஓ.பன்னீர்செல்வம் இணைந்த நிலையில், இதுவரை அவருக்கு எந்த பதவியும் வழங்கப்படவில்லை. தேர்தலில் தி.மு.க.வும் தோல்வி அடைந்தால், அடுத்து என்ன செய்வது என்று ஓ.பன்னீர்செல்வம் யோசித்து வருகிறார். இந்த நிலையில், தற்போதுள்ள தமிழக அரசியல் சூழ்நிலையில், த.வெ.க.வில் சென்று இணைவதே சிறப்பு என்று ரவீந்திரநாத் தனது தந்தை ஓ.பன்னீர்செல்வத்திடம் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. அதற்கு ஓ.பன்னீர்செல்வமும் பச்சைக்கொடி காட்டிவிட்டதாக கூறப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, த.வெ.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த், அமைச்சர் ஆதவ் அர்ஜூனா ஆகியோரிடம் ரவீந்திரநாத் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாக தெரிகிறது.

அமைச்சர்கள் இருவரும் ஓ.பன்னீர்செல்வத்தின் விருப்பத்தை முதல்–அமைச்சர் ஜோசப் விஜய்யிடம் கூற, அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டதாக கூறப்படுகிறது. தற்போதைய நிலையில், தென்மாவட்டங்களில்தான் த.வெ.க. வலுகுறைந்து காணப்படுகிறது. அதற்கு, முக்கிய அரசியல் முகம் அங்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, அந்தக் குறையை ஓ.பன்னீர்செல்வம் மூலம் தீர்த்துக்கொள்வதுடன், கட்சியையும் வலுப்படுத்த முடியும் என்று த.வெ.க. தலைமை கருதுகிறது. முன்னாள் முதல்–அமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் இருந்ததால், த.வெ.க.வில் அவருக்கு முக்கிய பொறுப்பு வழங்கவும் முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. விரைவில், தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் ஓ.பன்னீர்செல்வம் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இடைத்தேர்தலில் அதே தொகுதியில் த.வெ.க. சார்பில் மீண்டும் போட்டியிட ஓ.பன்னீர்செல்வம் திட்டமிட்டுள்ளார்.

2029–ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தேனி நாடாளுமன்ற தொகுதியில் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் த.வெ.க. சார்பில் களம் இறக்கப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

# டாஸ்மாக் ஊழல்: 41 இடங்களில் அதிரடி சோதனை!




சென்னை, ஜூலை. 29–

தமிழ்நாட்டில் தற்போது 4,048 பதிவு செய்யப்பட்ட டாஸ்மாக் விற்பனை நிலையங்கள் உள்ளன. அதில் ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.102 கோடி அளவுக்கு முறைசாரா வழிகள் மூலம் டாஸ்மாக் வருவாய் கட்சி நிதி என்ற பெயரில் திசை திருப்பப்பட்டு வந்ததுடன், கடந்த ஐந்து ஆண்டுகளில் இதன் மூலம் மாநில அரசுக்கு ஏற்பட்ட இழப்புகள் ரூ.3,600 கோடியை தொட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டது.

இது குறித்து மூத்த அரசு அதிகாரிகள் தமிழக முதல்–அமைச்சர் விஜய்யிடம் கூறியதையடுத்து, புதிய அரசு டாஸ்மாக் வருவாயில் வெளிப்படைத்தன்மையுடைய செயல்பாட்டை தொடங்க உத்தரவிட்டது. மேலும், காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் முறையை மறுஆய்வு செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

இதனிடையே தமிழக அரசின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், பள்ளி, கல்லூரிகள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இயங்கி வந்த 717 மதுபான விற்பனை நிலையங்களை தமிழக அரசு மூடியிருக்கிறது. டாஸ்மாக் மதுக்கடைகள் மூலம் வரும் ஒவ்வொரு ரூபாய் வருவாயும் முறையாக அரசின் கருவூலத்துக்கு வந்து சேருவதை உறுதி செய்யவும் அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் இயங்கும் டாஸ்மாக்கின் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் முழுவதும் நீண்ட காலமாக இயங்கி வரும் அதிகாரப்பூர்வமற்ற பண வசூல் அமைப்புகளை கலைத்துவிடவும் அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டி ருந்தது. இந்நிலையில் டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக தமிழ்நாடு முழுவதும் 41 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். இதன்படி ஈரோடு, கோவை (பீளமேடு), பொள்ளாச்சி, நரசிம்மநாயக்கன் பாளையம், நவகரையில் உள்ள கிடங்குகளில் சோதனை நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேட்டுப்பாளையம் நரசிம்மநாயக்கன்பாளையத்தில் சிவாஸ் மதுபான தயாரிப்பு ஆலை மற்றும் மன்னார்குடியில் உள்ள டி.ஆர்.பாலுவுக்கு சொந்தமான மதுபான ஆலையிலும் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

சிவகங்கை மாவட்டம் தொண்டி சாலையில் உள்ள டாஸ்மாக் குடோனில், ராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு துறை டி.எஸ்.பி. ராமச்சந்திரன் தலைமையிலான போலீசார் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர். இந்த சோதனையில் கணக்கில் வராத லட்சக்கணக்கான பணம் கைப்பற்றப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020